பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 02 திங்கட்கிழமை 18.12.2023 கதிர் 402

# பொருளாதார ரீதியாக ஆபத்தான இடத்தில் நாம்

## ஹர்ஷ டி சில்வா எம்.பி. எச்சரிக்கை

நாட்டின் பொருளாதார நிலைமைகள் மேம்பட்டுள்ளது என்றுகூறமுடியாது. வரிசைகள் இல்லை என்பதற்காக நாம் சிறப்பான இடத்தில் உள்ளோம் என்று கொள்ள முடியாது. நாங்கள் மிகவும் ஆபத்தான இடத்தில் உள்ளோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்புமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞2

## இது ரகசியம் அல்ல!

வற் வரி அதிகரிப்புக்காக நாடாளுமன்றம் டிசெம்பர் 10 விசேடமாகக் கூட்டப்பட்டது. ஆனால் அன்றைய தினம் வற் அதிகரிப்புத் தொடர்பான சட்டத் திருத்தத்தை நிறைவேற்ற முடியவில்லை. கூட்டநிறைவெண்(கோரம்)இல்லாமல் போனதே அதற்கான காரணம். ஆனால் இது, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு எதிர்க் கட்சிகளால் திட்டமிட்டுச் செய்யப்பட்ட வேலை என்பது தெரியவந்திருக்கின்றது.

ஞாயிற்றுக்கிழமை காலை நாடாளுமன்றம்கூடிவற் அதிகரிப்புத் தொடர்பில் விவாதத்தைத் தொடங்க ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தது. ஆனால் சிறிது நேரத்தின் பின்னர் ஆளும்கட்சியின்நாடாளுமன்ற ☞2

## 5 நாட்களுக்கு டெங்கு ஒழிப்பு

இன்று முதல் 5 நாட்களுக்கு நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:

பருவப்பெயர்ச்சி மழை தீவிரமடைந்துள்ள நிலையில், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

வடக்கு , கிழக்கு, மேல், ☞2

# அனைத்து அரசியல்வாதிகளும் பொறுப்புடன் நடக்கவேண்டும்

### நாணய நிதிய விடயத்தில் ஜனாதிபதி வலியுறுத்து

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தில் அனைத்துஅரசியல்தலைவர்களும் பொறுப்புடன் செயற்படுமாறுஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான திட்டத்தை நிராகரிக்கும் அனைவரும், நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து காப்பாற்றுவதற்கான நடைமுறைச் சாத்தியமான முன்மொழிவுகளை முன்வைக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கண்டி மாநகர சபையின் 'கரலிய அரங்கம்' மற்றும்கலைக் கூடம் என்பவற்றைத் திறந்து வைக்கும் நிகழ்வில்நேற்றுக்காலை கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

'கரலிய'புதியஅரங்கம் நிர்மாணிக்கப்பட்டதன் மூலம், கண்டி நகரம் 21 ஆம் நூற்றாண்டு தொடர்பான கட்டிட மாதிரியைப்பெற்றுள்ளது. இத்தகைய கட்டிடங்கள் இந்த நாட்டின் கலாச்சாரத்தின் ஒரு அங்கமாகும். இந்த நகரம் நமது வரலாற்றின் ஒரு பகுதியாகும். வரலாறு என்பது நமது கலாசாரம் மற்றும் சுற்றுலாத் துறையின் ஒரு அங்கம் என்பதையும் குறிப்பிட வேண்டும். ☞9

# தொடரும் மழை காலநிலையால் வடக்கில் இயல்பு நிலை பாதிப்பு

மழையுடனான காலநிலை காரணமாக முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும்மட்டக்களப்புமாவட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில்கடும்மழை காரணமாக அங்குள்ள அனைத்துக்குளங்களும் வான்பாய்கின்றன. பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. குறிப்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பண்டாரவன்னியன் மற்றும் புளியங்குளம் கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப்பணிப்பாளர்சி.கோகுலராஜ் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்மழைகாரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் முத்தையன்கட்டு குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. தண்ணிமுறிப்புக் குளத்தின் வான் கதவுகளும் திறக்கப் பட்டுள்ளன.

அதேநேரம் முல்லைத்தீவில் 56 கிராம சேவகர்கள் பிரிவுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதோடு 976 குடும்பங்களைச் சேர்ந்த 3010 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இவர்களில் மூன்று இடைத்தங்கல் முகாம்களில் 68 குடும்பங்களைச்சேர்ந்த 210பேர்பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள் என்றார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து ☞8

# கண்டி நகர அபிவிருத்தித் திட்டத்தின் இறுதி வரைவு ரணிலிடம் கையளிப்பு

பெரும் கண்டி நகர அபிவிருத்தித் திட்டத்தின் இறுதி வரைவு கண்டி ஜனாதிபதி மாளிகையில் வைத்து, ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

பெரும் கண்டி அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவது தொடர்பில் ஜெய்காவுடன் கலந்துரையாடவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்றையதினம்குறிப்பிட்டார்.

2023 பெப்ரவரி மாதம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி நகரை நன்கு திட்டமிடப்பட்ட, ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் முழுமையாகஅபிவிருத்தி செய்யப்பட்ட நகரமாக மாற்றுவதற்கான பிரேரணை அமைச்சரவையினால்ஏகமனதாக அங்கீகரிக் கப்பட்டது.

பிரதமரின்செயலாளர் அநுர திஸாநாயக்க தலைமையில்கண்டிநகர அபிவிருத்தித்திட்டத்தைத் தயாரிப்பதற்காக சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அதிகாரிகள் மற்றும் நகர ☞2

# பஸில் பொதுமக்களை மிரட்டினார் சுதந்திரக் கட்சி எம்.பி. குற்றச்சாட்டு

பொது ஜன பெரமுனவின் மாநாட்டில் பஸில் ராஜபக் ஷ பொது மக்களை அச்சுறுத்தியுள்ளார் என்று ஸ்ரீ லங்காசுதந்திரக்கட்சியின் மாத்தறை தொகுதி அமைப்பாளர் சஜின் வாஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொது ஜன பெரமுனவும், பஷில் ராஜபக்ஷவும் முடிந்தால் விரைவில் தேர்தலை நடத்திக் காண்பிக்குமாறும் அவர் சவால் விடுத்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் மாநாட்டில் உரையாற்றிய பஷில்ராஜபக்ஷவின் உரையை விமர்சித்தவாறு அவர் கருத்து வெளியிடுகையில்,

முன்னாள்அமைச்சர் பஷில் ராஜபக்ஷ நாயின் மீது கல்லெறிந்தால் அது ஓடுகிறது, ஆனால் நீங்கள் சிங்கத்தின் மீது கல்லெறிந்தால் ☞2

# எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோது ரணில் ஏன் வேலைசெய்யவில்லை?

### சஜித் இப்படிக் கேள்வி

தற்போதைய ஜனாதிபதி மிகப்பெரும் திறமையான செயற்பாட்டாளர் என்றால் அவர் எதிர்க்கட்சியில் இருந்த போது எதற்காக வேலை செய்யாது இருந்தார். அவர் எதிர்க்கட்சியில் இருக்கின்றபோது எப்போதுமே வேலை செய்வதில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பியகம பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய ஜனாதிபதி மிகப்பெரும் திறமையான செயற்பாட்டாளர் என்றால் அவர் எதிர்க்கட்சியில் இருந்த போது எதற்காக ☞2

# போதைப் பொருள் வேட்டையை தொடர்வதில் அமைச்சர் பிடிவாதம்

எந்தவொருகாரணத்துக்காவும் போதைப் பொருள் சுற்றிவளைப்புக்களை நிறுத்தப் போவதில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

போதைப்பொருள் வலையமைப்பை இல்லாதுசெய்வதேஎனது தேவையாகவுள்ளது. நாங்கள்கடத்தல்மற்றும் போதைப்பொருள்வலையமைப்பை இல்லாது செய்வோம். தொலைபேசியில் கதைத்து உயர்மட்டத்தில் தொடர்பு இருப்பவர்கள் தப்பித்துவிடலாம்என்று கருதுகின்றார்கள்.

நான் அமைச்சுப் பதவியில் இருக்கும் வரையில் தொலைபேசியில் கதைத்து விட்டுதப்பித்துக் கொள்வதற்கு வாய்ப்பளிக்க மாட்டேன். சில நேரங்களில் உயர் மட்டத்தினருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணுபவர்கள் இருக்கக்கூடும். அனால் அதற்கான பாரபட்சம் காண்பிக்கப் போவதில்லை.

எனது செயற்றிட்டத்துக்கு பலத்த தடைகள் உள்ளன. நான் அவற்றுக்கு அஞ்சப்போவதில்லை. தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதற்கு பொலிஸ் மாஅதிபர் மற்றும் விசேட அதிரடிப்படை ☞2

# சஜித் கட்சியுடன் இணைந்து செயற்பட சுதந்திர மக்கள் சபைக்கு விருப்பம்

## வெளிப்படுத்தினார் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

ஐக்கிய மக்கள் சக்தியுடன் பரஸ்பர நம்பிக்கையுடன்இணைந்து செயற்படுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக சுதந்திரமக்கள்சபையின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்டத்திற்கு நேற்று வருகை தந்த சுதந்திர மக்கள் சபை உறுப்பினர்கள் மறைமாவட்ட ஆயர்நோபேர்ட் அந்தாரியை சந்தித்து ஆசிபெற்றுக்கொண்டதோடுஅவருடன்சமகால நிலைமைகள்தொடர்பில் கலந்துரையாடினார்கள். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான சரித ஹேரத், நாலக கொடஹேவா ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேலும் தெரிவித்ததாவது:

கூட்டமைப்பை உருவாக்குவதை ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

உறுப்பினர்களின் எண்ணிக்கை 12ஐ நெருங்கியதை எதிர்கட்சி உறுப்பினர்கள் கண்டனர். ஜே.என்.பி. கட்சித் தலைவர் விமல் வீரவன்சவே இதனை முதலில் கவனித்தார். அப்போது எதிர்க்கட்சியில் ஏறக்குறைய 40 நாடாளுமன்ற உறுப்பினரக்ள் சபையில் இருந்தபோதும், அவர்கள் அவையில்இருந்துவெளியேறினால், நாடாளுமன்றத்தை நடத்தும் பலம் அவர்களுக்கு இருக்காது என்பதை விமல் உடனடியாக உணர்ந்தார்.

உடனேயே இந்த விடயத்தை எதிர்க்கட்சியின்பிரதமஅமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்லவிடம் விமல் அறிவித்தார். விமலின் அறிவித்தலுக்குப் பின்னர் ஆளும் கட்சியைப் பார்த்த கிரியெல்ல, விவாதம் ஆரம்பித்து வெகுநேரம் ஆன போதிலும் ஆளும் கட்சியைச் சேர்ந்த 12 பேர் மட்டுமே அவரவர் இடத்தில் அமர்ந்திருந்ததையும் அப்போதும் பிரதமர் தினேஷ், சபைத் தலைவர் சுசில் மற்றும் ஆளுங்கட்சியின் பிரதம அமைப்பாளர் ஆகியோர் இருக்கையில்இல்லைஎன்பதையும் அவதானித்தார். கிரியெல்ல உடனடியாக சடவடிக்கைக்குத் தயாரானார். அவருக்கு அருகில் அமர்ந்திருந்த எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசவிடம் திட்டத்தை விளக்கினார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்விலகிக்கொண்டால் வற் வரி அதிகரிப்பு தொடர்பான விவாதத்தை தொடர்ந்தும் நடத்த முடியாது என சஜித்திடம் கிரியெல்ல சுட்டிக்காட்டினார். சஜித்தின் அறிவுறுத்தலின்பேரில்உடனடியாக இரண்டு நகர்வுகள் இடம்பெற்றன. நாடாளுமன்றஉணவுவிடுதிமற்றும் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் வழமையாகத் திரியும் இடங்களில் ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எத்தனை பேர் உள்ளனர் என்பதைக் கண்டறிய குழுவொன்று அனுப்பப்பட்டது. அடுத்ததாகதமதுதிட்டத்தைஜே.வி.பி மற்றும்ஏனையஎதிர்க்கட்சிகளுக்கு அறிவித்து, அவர்களையும் இணங்க வைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தப் பணி நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆளும்தரப்பு உறுப்பினர்களைத் தேடிச் சென்றவர்கள் திரும்பி வந்து, சபையில் இருக்கும் 12 உறுப்பினர்களைத் தவிர வெளியே மேலும் 5 பேர் மட்டுமே இருக்கின்றனர் என்பதை கிரியெல்லவிடம் உறுதிப்படுத்தினர். கூட்டநிறைவெண் மணி ஒலிக்க விடப்பட்டுஅந்த 5பேரும்சபைக்குள் வந்தாலும்கூடபோதியநிறைவெண் கிடைக்காது என்பதை கிரியெல்ல உணர்ந்தார். அதேநேரம் நளின் பண்டார தனது நகர்வில் முழு வெற்றி பெற்றிருந்தார். ஜே.வி.பியின் அநுர உட்பட அனைத்துஎதிர்க்கட்சிநாடாளுமன்ற உறுப்பினர்களையும் சபையில் இருந்து வெளியேறச் சம்மதிக்கச் செய்திருந்தார். எல்லாம் சரியாகப் பொருந்தி வந்ததும் கிரியெல்ல திட்டத்தைக் கட்டவிழ்த்தார். சபையில் இருந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் திட்டம் இரகசியமாகத் தெரியப்படுத்தப்பட்டது. பின்னர் தானேமுதலில்சஜித்துடன்சபையை விட்டு வெளியேறினார்.

சஜித்தும்கிரியெல்லவும்சபையை விட்டு வெளியேறியதையடுத்து அநுரவும்விமலும்சபையைவிட்டு வெளியேறினர். அவர்களைத் தொடர்ந்து மற்ற எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபையை விட்டு ஒவ்வொருவராக வெளியேறியதால், அரசு சார்பு அமைச்சர்களுக்குச் சந்தேகம் வரவில்லை.

அதன்படி, நடவடிக்கையின் இறுதிப் பகுதி நளின் பண்டாரவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதாவது சபையில் கோரம் இல்லை என பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக் ஷவிற்கு அறிவித்து சபையை ஒத்திவைக்கும் வேலை அவருக்குரியது. திட்டமிட்டபடிநளின் அதை அறிவிக்கவிருந்தபோதுதான் எதிர்க்கட்சிமூலையில்சுமந்திரனும் பல தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமர்ந்திருப்பதைக் கண்டார். அப்போதுதான் நளினுக்கு தான் அவர்களுக்கு அந்தத் திட்டத்தைத் தெரிவிக்கவில்லை என்பது நினைவுக்கு வந்தது. உடனடியாக சுமந்திரனிடம் சென்று திட்டத்தைத் தெரிவித்து, அவரையும் ஏனைய உறுப்பினர்களையும் ஒருவாறு சம்மதிக்க வைத்தார். திட்டத்தை ஏற்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபையிலிருந்து மெல்ல நழுவி வெளியேறினர்.

இந்தநிகழ்வுகளின்பின்னர்,ஆளும் கட்சியின் 12 உறுப்பினர்களும் நளின் பண்டாரவும் மட்டுமே நாடாளுமன்றத்தில்எஞ்சியிருந்தனர். அதை உறுதிப்படுத்திய நளின் உடனடியாக எழுந்து சபையை நடத்துவதற்குத் தேவையான 20 உறுப்பினர்கள் சபையில் இல்லை எனவும், உடனடியாக சபையைமுழுமையாகப்பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதி சபாநாயகரிடம் தெரிவித்தார். நளினின் அறிவிப்பின்படி, சபையில் கோரம் இல்லை என்பதை உணர்ந்த பிரதி சபாநாயகர், உறுப்பினர்களை அழைப்பதற்கான மணியை அடிக்க நடவடிக்கை எடுத்தார்.

நாடாளுமன்றத்தில் தங்கியிருந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் 5 பேரும் உடனடியாக சபைக்கு வந்ததன் காரணமாக ஆளும்தரப்பு உறுப்பினர்களின் எண்ணிக்கை 17 ஆக அதிகரித்த போதிலும் அது சபையை நடத்துவதற்கு போதுமானதாக இல்லை. ஆபத்தை உணர்ந்த ஆளும் தரப்பு உறுப்பினர்கள் தமது சகாக் களை அலைபேசியில் அழைக்க முயற்சித்தனர். நாடாளுமன்றத்திற்கு அருகில் உள்ள மதுர விதானகே உள்ளிட்ட பலரையும் தொடர்பு கொண்டு அழைத்தனர். எனினும் மதுர விதானகே வந்தவுடன் அனைத்தும் முடிந்து விட்டது. ஏனென்றால், கோரம் மணி அடித்து 5 நிமிடங்களான பின்னரும் தேவையான எண்ணிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லாததால், திங்கட்கிழமைகாலை 9.30 மணி வரை ஒத்திவைக்க பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ முடிவு செய்தார்.

தமதுநடவடிக்கைவெற்றிபெற்றதில் சஜித், கிரியெல்ல, விமல், அனுர ஆகியோருக்கு பெரும் மகிழ்ச்சி. எதிர்க்கட்சியினருக்கான பகுதியில் அவர்கள் அனைவரும் முகமெல்லாம் சிரிபாக ஒருவரை ஒருவர் வாழ்த்திக்கொண்டு நின்றிருந்தனர். எதிர்க்கட்சியாக ஒன்றிணைந்து ஆளும் தரப்பை வீழ்த்த முடியாவிட்டாலும் இந்தமாதிரி அவர்களுக்கு ஒரு குடைச்சலாவது கொடுத்தோமே என்றுமகிழ்ந்திருப்பார்கள்போலும்....

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## 5 நாட்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களில் இந்த விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, இன்று மற்றும் நாளைவிசேடபூச்சியியல்ஆய்வுகள் நடத்தப்படவுள்ளன. வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 82,036 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். இந்த வருடத்தில் 49 டெங்கு இறப்புகள் பதிவாகியுள்ளன என்றார்.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் இன்று மிகவும் ஆபத்தான இடத்தில்இருக்கின்றோம். வரிசைகள் இல்லையென்ற கதையைக் கூறி மகிழ்ச்சியாக இருக்க முடியாது. நாட்டின்பொருளாதாரநிலைமைகள் மேம்பட்டுள்ளதுஎன்றுகூறமுடியாது. வரிசைகள் இல்லை என்பதற்காக நாம்சிறப்பான இடத்தில் உள்ளோம் என்று கொள்ள முடியாது. நாங்கள் மிகவும் ஆபத்தான இடத்தில் உள்ளோம்.

அரசாங்கம் தனது வருமானத்தை அதிகரிப்பதற்காக எடுத்துள்ள முடிவுகளால் மக்களும் சமூகமும் கடுமையான நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ளனர். அதேநேரம், வரி வருமானங்களுக்கு இணங்காது விட்டால் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்த வேலைத்திட்டமானது வீழ்ச்சிய டையும் வாய்ப்பும் உள்ளது.

அவ்வாறு வீழ்ச்சி அடைந்தால் எமக்கு கைகொடுப்பது யார்? இந்தப் பிரச்சினையைஏ அல்லதுபிநாட்டின் மூலம் தீர்த்துக்கொள்ள முடியும் என்று சிலர் கூறுகின்றார்கள். நாமே குழியை வெட்டி அதில் வீழ்ந்தால் அவர்கள் பாதுகாக்க வருவார்களா என்ற பிரச்சினை உள்ளது.

தேர்தல் வரும்போது சுவாரஸ் யமான கதைகளை கூறுவார்கள். சர்வதேச நாணய நிதியம் தேவையில்லை என்பார்கள். ஆனால் அது யதார்த்தமானது அல்லது. அதேநேரம்அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்குவதற்கு மற்றுமொரு வழியுள்ளது.

அதாவது மோடிசகள் மற்றும் திருட்டுக்கள் மூலமாக நாட்டுக்கு வெளியில் கொண்டு செல்லப்பட்ட பணத்தை மீளத் திருப்பிக் கொண்டு வந்தால் பெரும் மாற்றத்தை உருவாக்க முடியும். நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்ய வேண்டிய அவசிமில்லை.

எம்மிடம் திட்டமொன்று உள்ளதென்று கூறுகின்றார்கள். எதுவும் புரியாத மக்களுக்கு அவ்விதமான கதைகளைக் கூற முடியும். மக்களுக்குஉண்மையைக் கூறிநாம் அனைவரும் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவதா என்பதை கட்சிகள் சிந்திக்க வேண்டும்.

அல்லது மீண்டும் ஒருமுறை தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மக்களுக்கு மாயாஜாலத்தைக் காண்பித்து பொய்களைக் கூறுவதா என்பதையும் அரசியல் கட்சிகளே சிந்திக்க வேண்டும்.

அவ்வாறுபொய்களைக்கூறுவதன் ஊடாக நாட்டினை மீண்டும் பாரிய அழிவுக்கு கொண்டு செல்வதா என்பதையும் அரசியல் கட்சிகளே சிந்திக்க வேண்டும். எனவே தற்போதைய சூழலில் அரசியல் கட்சிகள் பொறுப்புடன் செயற்படுமா என்ற கேள்வியை பகிரங்கமாகவே எழுப்புகின்றோம்.

கடன் மறுசீரமைப்புச் செய்யாது நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது என்பதை தெரிவித்துவிட்டு உண்மைகளை மக்களுக்கு கூறி செயற்படுவது சிறந்தது. அவர்கள் ஏற்காது விட்டால் வீட்டுக்குச் செல்வது சிறந்து. அதனை விடுத்து பொய்களைக் கூறி மக்களுக்கு மரண வாயிலைத் திறந்து விடுவது பொருத்தமான செயற்பாடல்ல என்றார்.

## சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடவும், ஒன்றிணைந்த வேலைத்திட்டமொன்றுக்குச் செல்வதே தற்போதைய தேவை யாகவுள்ளது. நாம் தனிப்பட்டுச் செயற்படுவதை விடவும், ஒன்றாகச் செயற்பட்டு பொதுமக் களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்க்கட்சிகளுக்கு பொதுவானதொரு மேடை அவசியமாகின்றது.

எதிர்க்கட்சிகளில் பிரதான கட்சியாக இருப்பது ஐக்கிய மக்கள் சக்தி. ஆகவே அதனுடன் பரஸ்பர நம்பிக்கையுடன் இணைந்து செயற்பட எதிர்பார்க்கின்றோம். இது தற்போதையஅவசரதேவையாகும். இதனைப் பிற்போட முடியாது என்றார்.

## கண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிடல் துறையில் நிபுணர்கள் அடங்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அதற்கிணங்க, கட்டுகஸ் தொட்டை, கண்டி, குண்டசாலை ஆகிய பகுதிகளில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதில் விசேட கவனம் செலுத்தி பாரிய கண்டி அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டது.

மத்திய மாகாண ஆளுநர் உட்பட கண்டி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச் சர்களிடம் இந்த அபிவிருத்தித் திட்டம் முன்வைக்கப்பட்டு, மேலதிக கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்ற பின்னர், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட இறுதி வரைவு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

அபிவிருத்தித் திட்டம் குறித்து விரிவாக மீளாய்வு செய்யப்பட்டதுடன், கண்டி நகரின் வரலாற்று மற்றும் கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாத்து, மக்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில்கவனம்செலுத்தும் வகையில்அபிவிருத்தித்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அத்துடன், நாட்டில் நிறுவப்படவுள்ள பல்கலைக் கழகங்களில் சிலவற்றை கண்டி நகரில் அமைக்க எதிர்பார்க் கப்படுவதாகவும், இதனால் எதிர்காலத்தில் கல்விக்கான கேந்திரமாக கண்டி மாறும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கண்டிநகர அபிவிருத்தித்திட்டம் தொடர்பான கலந்துரையாடலின் பின்னர்அக்குரணைநகரஅபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெற்றதுடன், அக்குரணை நகர அபிவிருத்தி தொடர்பான முழுமையான அறிக்கையை 06 வாரங்களில் கையளிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

## பஸில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது திருப்பிச் சண்டையிடுகிறது, ஆனால் சில நேரங்களில் நாய்கள் அதை நினைவில் கொள்ள வேண்டும். ஒரு சிங்கம் தனது குடும்பத்திற்கு உறுதியளித்த பணிகளைத் தொடர்கிறது என்று தெரிவித்த கருத்துக்கள் ஊடாக பொதுமக்களை பகிரங்கமாகவே அச்சுறுத்தியுள்ளார். இதுஅவருடைய வழமையான பாணியாகும்.

இலங்கையின் வங்குரோத்து நிலைக்கு காரணமான குழுவில் பஷில் ராஜபக்ஷவும் ஒருவராவார். அதனை உயர் நீதிமன்றமே தெளி வாக அறிவித்துள்ளது. அவ்வாறான நிலையில், அவரால் எவ்வாறு சிங்கமாக தன்னை அடையாளம் காண்பிக்க முடியும்.

தற்போதுவரையில்தேர்தலொன் றுக்குச் செல்வாதற்கு அவர்களுக்கு துணிச்சலற்ற நிலைமை காணப்படு கின்றது. முடிந்தால் எந்தவொரு தேர்தலையும் உடனடியாக நடத்திக் காண்பிக்குமாறு சவால்விடுகின் றேன். அவ்வாறு தேர்தலை நடத்து கின்றபோதுநாய்கள்யார், சிங்கங்கள் யார்என்பதுஅம்பலமாகும். அதனை பொதுமக்களேவெளிப்படுத்துவார்கள் என்றார்.

## போதைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யினரின் பிரதானிக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன்.

அதேபோன்று பாதாளக் குழுவினருக்கும்ஒருவிடயத்தினைக் கூறுகின்றேன். நீங்கள் உடனடியாக உங்களது செயற்பாடுகளை நிறுத்துங்கள். இல்லாது விட் டால் என்ன நடக்கும் என்று உங்களுக்குத் தெரியும். பின்னர் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டார்கள் என்று கூறுவதில் பயனில்லை என்றார்.

## எதிர்க்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைசெய்யாது இருந்தார். அவர் எதிர்க்கட்சியில் இருக்கின்றபோது எப்போதுமேவேலைசெய்வதில்லை. தற்போது வேடிக்கையான சூழல் தோற்றம் பெற்றுள்ளது. ஜனாதிபதி வரியை அதிகரித்து விட்டு மலையகத்துக்குச் சென்றுள்ளார்.

அவருடையஆதரவாளர்களான மொட்டுக்கட்சியினர் தாம் புதி தாக மீண்டெழப்போவதாக கூறுகின்றார்கள். மாநாட்டை நடத்தி தாம் பார்த்துக்கொள்வோம் என்று கூறுகின்றார்கள். போலியாக ஆட்சிக்கு வந்து முட்டாள்தனமான காரியங்களைச் செய்து நாட்டை வங்குரோத்துஅடையச்செய்தவர்கள் தாம் பார்த்துக்கொள்வோம் என்று கூறுவதில் நியாயமில்லை.

ஏழு மூளைகள் கொண்ட காகம் வரும் வரையில் கிராமங்கள் முதல் நகரங்களில் உள்ள பொதுமக்கள் பலத்த எதிர்பார்ப்புடன் உள்ளார்கள். அதேபோன்று கால்நடைச் சொத்துக் களைப் பாதுகாக்கின்ற சம்மேளனத் தை நடத்தினார்கள். நாட்டை வங்குரோத்து அடையச் செய்வதில் பிரதான நபராக இருந்தவர் என்ன கூறினார் என்றால், நான் ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்கவில்லை என்று குற்றம் சாட்டுகின்றார்.

நான் எடுத்த தீர்மானம் மிகச் சரியானது என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும். நாட்டைவங்குரோத்து அடையச்செய்தமொட்டுக்கட்சியுடன் இணைந்து எவ்வாறு ஆட்சியை நடத்துவது. நாட்;டை சூறையாடி, நாட்டுக்கு தூரோம் செய்த காக்கைக் கூட்டத்துடன்இணைந்துஎம்மையும் அரசியல் செய்யவா கூறுகின்றீர்கள் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# பொலிஸாரின் தவறான செயற்பாடுகளால் சித்திரவதைக்குள்ளாகுகின்றனர் மக்கள்

## இரா.சாணக்கியன் காட்டம்





ஜனாதிபதி மீது உயர்மட்டத்தில் உள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு தனிப்பட்ட குரோதங்கள் இருப்பதன் காரணமாக அவர்களிடையே உள்ள முரண்பாடுகளை வைத்து மக்களை வதைக்கும் நிலையேற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு சிறையில் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை நாடாளு மன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சென்று பார்வையிட்டுள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளிலும் மாவீரர் நினைவேந்தல் தினத்தற்கு மாவீரர்களை நினைவேந்தல்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்தார்கள் என்ற அடிப்படையில் பெண்ணொருவர் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் சிறைச்சாலைக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை சந்தித்து கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து சிறைச்சாலை ஆணையாளர் பிரபாகரனுடனும் சிறைச்சாலையின் தற்போதைய நிலைமைகள் குறித் தும் நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டறிந்து கொண்டதாக தெரி வித்துள்ளார். இதன்போது மேலும் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், மிகவும் ஜனவரி மாதம் 06 ஆம் திகதி உயர்தரப்பரீட்சை எழுதவுள்ள மாணவர் ஒருவரும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதுசெய்து தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை சிறைச்சாலைக்கு சென்று சந்தித்தேன். கடந்த வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பு தினத்தன்று நானும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் ஜனாதிபதியைச் சந்தித்த போது மயிலத்தமடு பண்ணையாளர்களின் பிரச்சினை தொடர்பிலும் கலந்துரையாடியிருந்தோம்.

அத்துடன் பயங்கரவாதத் தடுப்பு சட்டம் தொடர்பிலும் கலந்துரையாடியிருந்தோம்.

அந்த நேரத்தில் இது அரசாங்கத்தின் நிலைப்பாடு அல்ல. பொலிஸாரின் தவறான செயற்பாடுகள் என ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார். (05)

# மன்னார் பொது வைத்தியசாலையின் கழிவகற்றல் பொறிமுறை சிக்கலில்

மன்னார் பொது வைத்தியசாலையில் கழிவுகள் அகற்றப்படாதமையால் மன்னார் பொது வைத்தியசாலைக்குறிய பிராந்திய சுகாதார கழிவகற்றல் நிலையம் சுகாதார சீர்கேட்டுக்கு உள்ளாகியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பு காரணமாக மன்னார் நகரசபைக்கு சொந்தமான பாப்பாமோட்டை பகுதியில் அமைந்துள்ள திண்ம கழிவு முகாமைத்துவ நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டதுடன் நகர சபையால் திண்மக் கழிவு மற்றும் மலக்கழிவு அகற்றல் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் பல நாள்களாக மருத்துவக்கழிவு, உணவுக்கழிவு மற்றும் மலக் கழிவுகள் அகற்றப்படாதமையால் மன்னார் பொது வைத்தியசாலைக்குறிய பிராந்திய சுகாதார கழிவகற்றல் நிலையம் சுகாதார சீர்கேட்டுக்கு உள்ளாகியுள்ளதுடன் துர்நாற்றமும் வீசி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதே நேரம் நோயாளர் விடுதிகளில் உள்ள மலசல கூடங்கள் நிறைந்து வழிவதால் விடுதிகளை நோயாளிகள் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதுடன் மழை காரணமாக டெங்கு நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

தொடர்ச்சியாக கழிவகற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாத பட்சத்தில் விடுதிகளை மூட வேண்டிய நிலை ஏற்படும் என்பதுடன் ஏற்கனவே சேகரிக்கப்பட்டு களஞ்சியப் படுத்தப்பட்ட குப்பைகளால் தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை நிர்வாகத்தால் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில் எந்தவித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் வைத்தியசாலைக்கு நிரந்தர பணிப்பாளர் இல்லாமையும் பல்வேறு பிரச்சினைகளுக்கு காரணமாக அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் வைத்தியசாலை மாத்திரமின்றி பொது இடங்கள், வீடுகள், அலுவலகங்கள் உணவகங்களிலும் குப்பைகள், அகற்றப்படாத நிலையே காணப்படுவதாக மக்கள் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன் மேற்படி விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், ஆளுநர் விரைந்து நடவடிக்கைமேற்கொள்ள வேண்டும் என்பதுடன் தீர்வை வழங்க முடியாத பட்சத்தில் மாற்றுவழிகளையாவது மேற்கொண்டு தருமாறு மன்னார் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)

# மட்டு. சிறையில் கைதியை தாக்கிக் கொன்ற சக கைதிகள் இருவருக்கு விளக்க மறியல்

மட்டக்களப்பு சிறைச்சாலையில் சக கைதிகளால் ஆண் ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இனங்காணப்பட்ட இரண்டு கைதிகளை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் உத்தரவிட்டார்.

கைதியின் மரணம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட பொலிஸாரின் விசாரணை மூலம் இனங்காணப்பட்ட இந்த இரு கைதிகளுக்கு எதிராக பொலிஸார் வழக்கு தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கு கடந்த வியாழக்கிழமை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிவான் விளக்கமறியல் உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்த இரு கைதிகளும் வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

கொக்கட்டிச்சோலை முனைக்காடு பிரதேசத்தைச்சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 46 வயதுடைய சோமசுந்தரம் துரைராஜா என்பவர் கசிப்பு தொடர்பான வழக்கொன்றில் நீதிமன்றத்தில் ஆஜராகாதமையால், நீதிமன்றம் பிறப்பித்த பிடிவிறாந்தில், கடந்த நவம்பர் 22ஆம் திகதி கொக்கட்டிச்சோலை பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

கைதானவரை மறுநாள் நவம்பர் 23ஆம்திகதிகளுவாஞ்சிக்குடிசுற்றுலா நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, அவரை பிணையில் எடுப்பதற்கு எவரும் இருக்கவில்லை. இதனால் அவர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

அந்த சிறைச்சாலைக்குள் அவரை சக கைதிகள் தாக்கியுள்ளனர். அதனையடுத்து, தாக்கப்பட்டு படுகாயமடைந்த கைதி நவம்பர் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்ட நீதிவான் பீற்றர் போல் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

அதன் பின்னர், பிரேத பரிசோதனையின்போது கைதி மொட்டையான ஆயுதத்தால் தாக்கப்பட்டே உயிரிழந்துள்ளார்; எனக் கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, கைதியின் உடல் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பாக மட்டக்களப்பு தலைமையக பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது உயரிழந்தவருடன் 9 கைதிகள் சிறைக்கூட அறை ஒன்றில் இருந்து வந்துள்ளனர் எனவும், குறித்த நபர் தொடர்ச்சியாக கசிப்பு தேவை என சத்தமிட்டு வந்துள்ளார் எனவும், இதனால் சக கைதிகளுக்கும் அவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக அவரை சக கைதிகளான வாழைச்சேனையை சேர்ந்த இருவர் தாக்கினர் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் கைதான இரு கைதிகளும் போதைப் பொருள் சார்ந்த குற்றத்தால் வாழைச்சேனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அதனையடுத்து, கைதியின் மரணம் குறித்த வழக்கிலும் சிக்கி, தற்போது நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கொழும்பு விஜேராம மாவத்தையிலுள்ள வீட்டிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

கொழும்பு 5, விஜேராம மாவத்தையில் உள்ள வீடொன்றிலிருந்து பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்; எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கொழும்பு விஜேராம மாவத்தை பகுதியைச் சேர்ந்த மித்ராணி பெர்னாண்டோ என்ற பெண்ணாவார்.

இவர் தனது வீட்டில் தனிமையில் வசித்து வந்த நிலையில் தனது வீட்டின் அறையினுள் வாய் மற்றும் மார்பு பகுதிகளில் இரத்தம் கசிந்த நிலையில் தரையில் சடலமாகக் கிடந்துள்ளார்.

பொலிஸ் அவசர அழைப்பு சேவையான 119 இற்கு கிடைத்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்த கறுவாத்தோட்டம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

குறித்த நபர் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்து காணப்படும் நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கறுவாத்தோட்டம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தானியங்கி முக அடையாளம் காணும் முறை

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தானியங்கி முக அடையாளம் காணும் முறைமையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

குற்றவாளிகளை ஒழிப்பதற்கான மற்றுமொரு நடவடிக்கையாக அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விமானநிலையத்தின் வெளியேறும் மற்றும் நுழைவு முனையங்களில் 8 கமெராக்கள் பொருத்தப்படும் எனவும் அவர்களின் முகங்களைச் சோதனை செய்வதன் மூலம் தேடப்படும் குற்ற வாளிகள் உட்பட நபர்களை பொலிஸாரால் கைதுசெய்ய முடியும் என அவர் கூறியுள்ளார். முதற்கட்ட நடவடிக்கையாக தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள குற்றவாளிகளின் தரவுகளை இந்த தானியங்கி அடையாள அமைப்பில் உள்ளிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தற்போது, 1091 குற்றவாளிகளின் தரவுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. அதில் 790 பேர் தங்கள் தரவுகளைப் பூர்த்தி செய்துள்ளனர். 750 பேரின் புகைப்படங்களைப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 583 பேர் வெளிநாட்டு கடவுச்சீட்டை தயாரித்துள்ளனர். 98 பேர் வெளிநாடு சென்றுள்ளனர். 37 பேருக்கு சிவப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேலும் 42 சொத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# மஹிந்த கூறும் விடயத்துக்கு இணங்குகிறார் சாணக்கியன்

குருதிக்கறை படாதவர்களுக்குப் பொறுப்பை வழங்குமாறு மஹிந்த கூறிய விடயத்திற்கு தானும் இணங்குவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார். குருதிக்கறை யாரின் கைகளில் அதிகம் இருக்கிறது என்று பார்த்தால் பிள்ளையான் கைகளிலே இருக்கிறது. அதைவிட மஹிந்தராஜபக்ஷவின் கைகளிலே இருக்கிறது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு சிறைச்சாலைக்குச் சென்ற நிலையில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்தவுடன் நாட்டில் எவ்வாறு நிலைவரம் இருந்ததோ அதே போன்று மீண்டும் நிலைவரம் மாறியிருக்கிறது ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சியில். இவ்வாறான பல பிரச்சினைகள் காணப்பட்டன. அந்த அனைத்து பிரச்சினைகளையும் தற்போது மக்கள் முகங்கொடுத்துக் கொண்டு தான் இருக்கின்றார்கள் என சுட்டிக்காட்டியுள்ளார். (05)

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# போதை வர்த்தகத்தை ஒழிக்கும் துணிவு அமைச்சருக்கு உண்டா?

போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுபவர்களை வேட்டையாடும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருப்பதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸ் அறிவித்திருக்கிறார். எந்தவொரு காரணத்துக்காவும் போதைப்பொருள் சுற்றிவளைப்புக்களை நிறுத்தப்போவதில்லை என்றும் கடந்த இரு நாட்களாக அவர் கருத்துத் தெரிவித்து வருகின்றார்.

''போதைப்பொருள் வலையமைப்பை இல்லாதுசெய்வதே எனது தேவையாகவுள்ளது. நாங்கள் கடத்தல் மற்றும் போதைப்பொருள் வலையமைப்பை இல்லாது செய்வோம். தொலைபேசியில் கதைத்து உயர்மட்டத்தில் தொடர்பு இருப்பவர்கள் தப்பித்து விடலாம் என்று கருதுகின்றார்கள்.

நான் அமைச்சுப் பதவியில் இருக்கும் வரையில் தொலைபேசியில் கதைத்து விட்டு தப்பித்துக்கொள்வதற்கு வாய்ப்பளிக்க மாட்டேன். சில நேரங்களில் உயர் மட்டத்தினருடன் நெருங்கிய தொடர்புகளைப்பேணுபவர்கள்இருக்கக்கூடும்.அனால் அதற்கான பாரபட்சம் காண்பிக்கப்போவதில்லை.

எனது செயற்றிட்டத்துக்கு பலத்த தடைகள் உள்ளன. நான் அவற்றுக்கு அஞ்சப்போவதில்லை. தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதற்கு பொலிஸ் மா அதிபர் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பிரதானிக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன்.

அதேபோன்று பாதாளக் குழுவினருக்கும் ஒரு விடயத்தினைக் கூறுகின்றேன். நீங்கள் உடனடியாக உங்களது செயற்பாடுகளை நிறுத்துங்கள். இல்லாது விட்டால் என்ன நடக்கும் என்று உங்களுக்குத் தெரியும். பின்னர் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள் என்று கத்திப் பயனில்லை'' என்று அமைச்சர் நேற்று நிகழ்வு ஒன்றில் ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் இவ்வாறு உரையாற்றுவது ஒன்றும் புதிதில்லை. ஆனால் களத்தில் போதைப் பொருள் வர்த்தகம் வளர்ந்து வந்திருக்கிறதே தவிர குறைந்ததில்லை. கோட்டாபய ராஜபக்ச அரசுத் தலைவராக வந்தபோதுகூட போதை வர்த்தகத்தில் ஈடுபடுவோரை ஒழிப்பேன் என்று சூளுரைத்தார். போரில்கடுமையானநிலைப்பாடுகளைஎடுத்ததுபோல இதுவிடயத்திலும்அவர்ஈவிரக்கமற்றநடவடிக்கையில் இறங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஒரு சில நடவடிக்கைகள்எடுக்கப்பட்டன. ஆனால், உருப்படியாக எதுவும் நடக்கவில்லை. பின்னர் கோட்டாவால் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் போதை வர்த்தகம் பெருமளவில் வளர்ந்தது.

தண்டனை பெற்று சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள குற்றவாளிகளும் துபாய் போன்ற வெளிநாடுகளில் தங்கியிருக்கும் குற்றவாளிகளும் இலங்கையில் போதை வர்த்தகத்தில் முக்கிய பங்காற்றும் வசதி தொடர்ந்து கிட்டும்வரை, வெளியே இருக்கும் சில்றைகளை வேட்டையாடுவதால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. அதேபோன்று அமைச்சரே கூறுவதைப் போல ஆளும் தரப்பினரின் ஆதரவு போதை வர்த்தகர்களுக்கு இருக்கும் வரைக்கும் அதனைக் கட்டுப்படுத்துவதும் ஒழிப்பதும் நடக்கக்கூடியதல்ல. எனவே இவர்கள் அனைவர் மீதும் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே அமைச்சர் சொல்வதைப் போல போதை வர்த்தகத்தை உண்மையாகக் கட்டுப்படுத்த முடியும். அதற்கான துணிவு அமைச்சருக்கு இருக்கிறதா?




# அரசியல் கலந்த விளையாட்டா ஒலிம்பிக்ஸ்? ரஷ்யாவுக்கும் தடை ? இஸ்ரேலுக்கும் தடையா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா



பிரான்சில் திட்டமிட்டபடி நடைபெறவிருக்கும் 33ஆவது கோடைக்கால ஒலிம்பிக்ஸ் தொடருக்கான பெரும் அளவில் ஆயுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பாரிஸ் 2024 ஒலிம்பிக்ஸ்:**

லண்டனுக்கு அடுத்தபடியாக, மூன்று முறை கோடைக்கால ஒலிம்பிக்ஸை நடத்தும் இரண்டாவது நகரமாக பாரிஸ் தற்போது திகழ்கிறது.

இந்த ஒலிம்பிக்கில் இஸ்ரேலுக்குகாசாவில்நிகழும்போரால் 2024ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெறும்போட்டிகளில்இருந்து தடைசெய்யப்படலாம் என்ற கருத்து பரவலாக எழுந்துள்ளது.

விளையாட்டில் அரசியல் தலையீடு தேவையற்றது எனக் கருதப்பட்டாலும், காலங்காலமாக சர்வதேச அரங்கில், முக்கியமாக ஒலிம்பிக் போட்டிகளில் பகிஷ்கரிப்பும், புறக்கணிப்பும் தொடர்ந்து வருகிறது.



1980களில் மாஸ்கோ ஒலிம்பிக் போட்டிகளை அமெரிக்கா பகிஷ்கரித்ததும், பின்னர் 1984இல் அமெரிக்காவில் நடந்த போட்டிகளை ரஷ்யா புறக்கணித்ததும் வரலாறு.

**உக்ரைன் புறக்கணிப்பா ?**

உக்ரைன் படையெடுப்பிற்குப் பிறகு, ரஷ்யா மற்றும் பெலாரஸ் விளையாட்டுவீரர்கள்பலசர்வதேச விளையாட்டுநிகழ்வுகளில்இருந்து தடை செய்யப்பட்டனர். ஆயினும் இந்த ஆண்டு சில கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. 2022 தடைக்குப் பிறகு இந்த ஆண்டு விம்பிள்டன் போட்டியில் பங்கேற்க ரஷ்ய மற்றும் பெலாரஸ் வீரர்கள் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



ரஷ்யா மற்றும் பெலாரஸ் வீரர்கள் பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் நடுநிலையாக பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள் எனச் சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் அறிவித்துள்ளது. ரஷ்ய, பெலாரஸ் வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டால், பாரிஸ் ஒலிம்பிக் விழாவை பகிஷ்கரிப்பதாக உக்ரைன் எச்சரித்திருந்தது. உக்ரைனைப் போல இந்த ஒலிம்பிக் போட்டியை 40 நாடுகள் புறக்கணிக்கக்கூடும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தினால் ரஷ்யா போட்டிகளில் கலந்துகொள்ளும் என வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பை போலந்து, லித்துவேனியா, எஸ்டோனியா, லட்வியா ஆகிய நாடுகள் கூட்டாக நிராகரித்துள்ளன. (இதனையடுத்து, சுமார் 40 நாடுகள் வரை ஒலிம்பிக் போட்டிகளை புறக்கணிக்கக்கூடும் எனவும் அவ்வாறு இடம்பெற்றால், ஒலிம்பிக் நிகழ்வுகள் அர்த்தமற்றதாகும் எனவும் போலந்தின் விளையாட்டு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் (Kamil Bortniczuk) கமில் போர்ட்னிசுக் குறிப்பிட்டுள்ளார்.

**இஸ்ரேலுக்கு தடை வருமா?**

இன்னும் ஏழு மாதங்களில், 2024 ஒலிம்பிக் போட்டிகள் பாரிஸில் தொடங்கும் நிலையில், காசாவில் நடந்துவரும் இஸ்ரேல்–ஹமாஸ் போர் இந்த உலகளாவிய விளையாட்டு நிகழ்வை எவ்வாறு பாதிக்கும் என்பது பற்றிய நிச்சயமற்ற தன்மை எழுந்துள்ளது.

இஸ்ரேலிய கொள்கைகள் மீதான நிலைப்பாட்டிற்கும் விமர்சனத்திற்கும் பெயர் பெற்ற அமெரிக்க இதழான 'நேன்' ஊடகத்தில் சமீபத்தில் சர்வதேச ஒலிம்பிக்

(9ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர்
Kalaikkathir

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணம் வழங்கும் கடற்படையினர்



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கையில் கடற்படையின் நிவாரணக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன .

அனுராதபுரம் மாவட்டத்தின் பதவியா, பராக்கிரமபுர பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே இவ்வாறு நிவாரணம் வழங்கப்படுகின்றது .

அதன்படி அநுராதபுரம் மாவட்டத்தின் பதவியா, பராக்கிரமபுர பிரதேசத்தில் மா ஓயா பெருக்கெடுத்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் .

மேலும், மோசமான காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தேவையான மேலதிக ஆயத்துப்படுத்தல்களைக் கடற்படையினர் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, கிளிநொச்சி கண்டாவளை, முல்லைத்தீவு மாங்குளம், மன்னார் மாந்தை உள்ளிட்ட பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது .

(05)

# இலங்கையில் ஒரு கோப்பை சுடுநீருக்கு 100 ரூபா வசூல்

## சர்ச்சையை ஏற்படுத்திய உணவகம்

இலங்கையில் ஒரு கோப்பை சுடுநீருக்கு100ரூபாவசூலிக்கும்கடை குறித்து சமூக வலைத் தளங்களில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

இந்தசெய்திஉண்மையானதென உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் குறிப்பிட்டுள்ளார்.

ஹோட்டல் கட்டண ரசீது தேசிய நுகர்வோர் முன்னணியிடம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது ஒன்று தான் தெரிந்த விடயமாக பேசப்படுகின்றது. மக்கள் அவசரத்திற்கு சுடுநீர் அல்லது குளிர்ந்த நீரை குடிக்கின்றார்கள். இப்படி ஒரு கோப்பை தண்ணீருக்கு கட்டணம் வசூலிப்பதை ஏற்க முடியாது.

இது மிகப்பெரிய அநியாயம். இது போன்ற செயல்கள் நடக்காமல் தடுக்க வேண்டும். இது தொடர்பாக நுகர்வோர் ஆணையகத்திடம் முறைப்பாடு செய்துள்ளோம்.

நுகர்வோர் சட்டத்தில் கூட இப்படி ஒரு தண்ணீருக்கு பணம் வசூலிக்க அதிகாரம் இல்லை. இதற்கு தொழிலதிபர்களை குறை சொல்ல முடியாது.

நாமெல்லாம் பொருளாதார நெருக்கடியில் இருக்கிறோம். மின் கட்டணம்விண்ணைமுட்டும்அளவில் உள்ளது. அதனால் அனைவருக்கும் கடினமான நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே இவ்வாறு செய்கின்றார்கள். எனினும் இதனை அனுமதிக்க முடியாது. இது ஒரு மோசமான முன்னுதாரணமாகும். இதை இங்கிருந்து நிறுத்தாவிட்டால் எதிர்காலத்தில் பெரிய பிரச்சினை ஏற்படும். சாமானியர்கள் பாதிக்கப்படுவார்கள். முறையான கட்டுப்பாடு இல்லாதது தான் இதற்குக் காரணமாகும். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(05)

# ஐஸ் போதைப் பொருளுடன் கைதான ஒருவர் மறியலில்

ஐஸ் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டார் எனக் குற்றம் சாட்டப்பட்ட பெண் பேலியகொடை பொலிஸ் குற்றப்பு புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட நிலையில் சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் காந்தி என்ற 56 வயதுடைய பெண்ணாவார்.

பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் பாலத்துறை பிரதேசத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பொன்றில் போதைப்பொருள் கடத்தல் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் 15 லட்சம் ரூபா பெறுமதியான 100 கிராம் 100 மில்லி கிராம் நிறையுடைய ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் கடந்த 14 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகல விதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

# 32 வீடுகளில் கொள்ளையிடச் சென்று அத்தனை தடவையும் மாட்டிய திருடன்

காலி-கராப்பிட்டியபிரதேசத்தில் வசிக்கும் 31 வைத்தியர்களின் வீடுகளில் கொள்ளையிட்டு விளக்கமறியலில் இருந்தவர் முப்பத்திரெண்டாவது முறையும் வீடொன்றில் கொள்ளையிட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் இரவு நேரத்தில் ஜன்னல் வழியாக சட்டத்தரணி ஒருவரின் வீடொன்றினுள் நுழைந்து 20 லட்சத்து 6 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைளை கொள்ளையிட்டு தப் பிச் சென்றுள்ளார். இவர் கொள்ளையிட்ட பொருள்களை காலி பிரதேசத்திலுள்ள நகைக்கடையொன்றில்விற்பனை செய்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கராப்பிட்டிய பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (05)

# பஸ் கட்டணங்கள் 20 வீதம் எகிறும்?

நாட்டில் எதிர்வரும் காலங்களில்பஸ்கட்டணங்கள்சுமார்20 வீதத்தால்அதிகரிக்கப்படஉள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள்கள் மீது வரி விதிக்கப்படுவதால் பஸ் கட்டணங்கள், ஓட்டோக் கட்டணங்கள் மற்றும் பாடசாலை போக்குவரத்து கட்டணங்கள் உள்ளிட்ட சகல கட்டணங்களும் உயர்த்தப்பட உள்ளன.

மேலும், போக்குவரத்து கட்டணங்களைப் போன்றே வாகன உதிரிப் பாகங்களின் விலைகளும் உயர்த்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், தற்போதைய நிலைமைகளில்பஸ்கட்டணத்தை குறைந்தபட்சம் 10 ரூபாவால் உயர்த்தப்பட வேண்டுமென இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், எதிர்வரும் காலங்களில், பஸ் கட்டணங்கள் 20 வீதத்தால் உயர்த்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (05)

# பொலிஸ் உத்தியோகத்தர்களை கூரிய ஆயுதத்தால் தாக்கிவிட்டுத் தப்ப முயன்றவர் மீது துப்பாக்கி சூடு

இரவு நேரத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பொரளை பொலிஸ் உத்தியோகத்தர் இருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கிவிட்டு தப்பிச்செல்ல முற்பட்டவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் அநுராதபுரம் பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடையவராவார்.

விசாரணையில் சந்தேக நபரிடத்திலிருந்து கூரிய ஆயுதம் மற்றும் தலைக்கவசம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

துப்பாக்கி சூட்டில் காயமடைந்த சந்தேக நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வெலிகம மீன் சந்தையில் துப்பாக்கிச்சூடு; மீன் வியாபாரியும் உதவியாளரும் காயம்

காலி மாத்தறை பிரதான வீதியில் வெலிகம எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள மீன் சந்தையொன்றில் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் குறித்த துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ள நிலையில், மீன் சந்தை வியாபாரி ஒருவரும் அவரது உதவியாளர் ஒருவரும் காயமைடைந்துள்ளனர்.

40 வயதுடைய மீன் வியாபாரியொருவரும்52வயதுடைய உதவியாளர் ஒருவருமே துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து வெலிகம வலான அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய இருவரும் தப்பிச் சென்றுள்ள நிலையில், அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரால்முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (05)

# ஜப்பான், தென்னாபிரிக்கா, சுவிட்சர்லாந்து தூதர்கள் வடக்கில் முகாமிட்டு கலந்தாய்வு

## உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறை குறித்து




வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்துள்ள ஜப்பான், தென்னாபிரிக்கா, சுவிட்ஸர்லாந்து தூதுவர்கள் யாழில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாவில் பங்கேற்றதோடு, உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறை தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினருடன் தீவிரமான கலந்துரையாடல்களில் பங்கேற்றுள்ளனர். இலங்கைக்கான ஜப்பானியதூதுவர்மிசுகொஷிஹிதேகி, இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் சிரி வொல்ட் மற்றும் இலங்கைக் கான தென்னாபிரிக்க தூதுவர் சாண் டில் ால்க் ஆகியோர் வடக்குக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

யாழில் நடைபெற்று வரும் சர்வதேச திரைப்பட விழாவில் பங்கேற்பது பிரதான விடயமாக இருந்தாலும், அந்நிகழ்வுக்கு அப்பால் பல்வேறு சந்திப்புக்களிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

குறிப்பாக தமிழ் அரசியல் கைதிகள் சார்ந்து செயற்படும் குரலற்றவர்களுக்கான அமைப்பு, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான வடக்கு, கிழக்கு சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் இறுதிப்போரில் சரணடைந்தவர்களின் உறவினர்கள், நேரடிச் சாட்சியங்கள் உள்ளிட்ட தரப்பினருடன்சந்திப்புக்களை முன்னெடுத்துள்ளனர். குறிப்பாக, தென்னாபிரிக்கா, சுவிட்ஸர்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகள் இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையை ஸ்தாபித்தல், நடைமுறையில் அதனை வெற்றி பெறச்செய்தல் என்பதில் கடுமையான பிரயத்தனம் செய்துவருகின்றன.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி அடுத்த கட்டச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு மேற்படி தூதுவர்கள் முயற்சிகளை எடுத்துள்ளனர். அதனடிப்படையில் வடக்கில் அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளதோடு, விசேடமாக சரணடைந்தவர்களின் உறவினர்கள் மற்றும் சாட்சியாளர்களை அழைத்து சரணடைந்த பகுதியை அடையாளம் காணும் செயற்பாட்டிலும் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை, இலங்கை அரசாங்கம் அடுத்த ஆண்டின் முற்பகுதியில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அறிவித்துள்ள நிலையில், தென்னாபிரிக்கா அதற்கான ஆலோசனைகளையும், சுவிட்ஸர்லாந்து மற்றும் ஜப்பான் ஆகியன நிதிப் பங்களிப்பையும் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)



## தொடரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பெய்து வரும் அடைமழை காரணமாக இதுவரை 1299 குடும்பங்களைச்சேர்ந்த 4096 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்த நிலையில் மக்கள் 3 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும், கரைச்சி - கண்டாவளை பகுதிகளிலேயே பாதிப்புக்கள் அதிகமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அந்த வகையில், மாயவனூர் பகுதியில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 32 பேரும், மலையாளபுரம் பகுதியில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 28 பேரும், செல்வாநகர் பகுதியில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 13 பேரும், இரத்தினபுரி பகுதியில் 120 குடும்பங்களைச் சேர்ந்த 405 பேரும், ஜெயந்தி நகரில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 57 பேரும், ஆனந்தபுரம் பகுதியில் 56 குடும்பங்களைச் சேர்ந்த 187 பேரும், மருதநகர் பகுதியில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேரும், மாவடியம்மன் பகுதியில் 53 குடும்பங்களைச் சேர்ந்த 182 பேரும், ஆனைவிழுந்தான் பகுதியில் ஒரு குடும்பத்தைச்சேர்ந்த 2 பேரும், ஸ்கந்தபுரம் பகுதியில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 51 பேரும், கனகாம்பிகைக் குளம் பகுதியில் 2 குடும்பங்களைச்சேர்ந்த 7 பேரும், சிவநகர் பகுதியில் 25 குடும்பங்களைச்சேர்ந்த 78 பேரும், உருத்திரபுரம் கிழக்கு பகுதியில் 24 குடும்பங்களைச்சேர்ந்த 81 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கனகபுரம் பகுதியில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரும், பெரியகுளம் பகுதியில் 101 குடும்பங்களைச் சேர்ந்த 312 பேரும், பிரமந்தனாறு பகுதியில் 85 குடும்பங்களைச் சேர்ந்த 271 பேரும், தர்மபுரம் கிழக்கு பகுதியில் 220 குடும்பங்களைச் சேர்ந்த 628 பேரும், தர்மபுரம் பகுதியில் 41 குடும்பங்களைச் சேர்ந்த 123 பேரும், புன்னைநீராவி பகுதியில் 43 குடும்பங்களைச் சேர்ந்த 128 பேரும், குமாரபுரம் பகுதியில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 44 பேரும், ஊரியான் பகுதியில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 34 பேரும், உமையாளபுரம் பகுதியில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 104 பேரும், பரந்தன் பகுதியில் 174 குடும்பங்களைச் சேர்ந்த 588 பேரும், கண்டாவளை பகுதியில் 156 குடும்பங்களைச் சேர்ந்த 468 பேரும், முரசுமோட்டை பகுதியில் 26 குடும்பங்களைச்சேர்ந்த 77 பேரும், புளியம்பொக்கணை பகுதியில் 50 குடும்பங்களைச் சேர்ந்த 179 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

மன்னார் மாவட்;டத்தின் தேவன் பிட்டி கிராமத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கை அடுத்து அங்குள்ள மக்கள் இரண்டு முகாம் களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அத்தோடு மன்னாரின்சவுத்பார், சாந்திபுரம், ஜீவா நகர், ஜிம்ரான் நகர், எமில் நகர், பனங்காட் டுக்கொட்டு, பள்ளிமுனை, நூறுவீட் டுத்திட்டம் போன்ற பிரதேசங் களிலேயே வெள்ளநிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேநேரம், மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக, கிரான் மற்றும் புலிப்பாய்ந்தகல் ஆகிய பகுதிகளுக்கான தரைவ ழிப்பாதை முற்றாக செயலிழந் துள்ளது. இதனையடுத்து இயந்திரப் படகுச்சேவையொன்று ஆரம்பிக்கப் பட்டள்ளது.

மேலும், உறுகாமம், மியன் கல்குளம், இலாவாணை, மற்றும் மாதுறு ஓயா வடிச்சல் ஊடாக வெளியேறும் நீர் காரணமாக தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெள்ளம்காரணமாக ஐந்துகிராமங்களைச்சேர்ந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறுபிரதேசசெயலாளர்பிரிவுகளைச் சேர்ந்த 1334 குடும்பங்களும் 4242 தனிநபர்களும் பாதிக்கப்பட் டுள்ளதாக மட்டக்களப்பு, அம்பாறை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப்பணிப்பாளர் முஹமட் றியாஸ் தெரிவித்துள்ளார்.




# அரசியல் கலந்த விளையாட்டா ஒலிம்பிக்ஸ்?.............

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கமிட்டி (IOC) இஸ்ரேலை ஒலிம்பிக்கில் இருந்து தடை செய்ய வேண்டுமா என்று கேள்வியை எழுப்பியுள்ளது.

அத்துடன் இஸ்ரேலும் ஐஓசியும் மோதல் போக்கில் உள்ளன என்றும் அது எச்சரித்தது. ஐஓசி (IOC) ரஷ்யாவை எவ்வாறு உன்னிப்பாகப் பார்க்கிறதோ அதேபோன்று, இஸ்ரேல் அரசுக்கு என்ன நடக்கலாம் என்பதனை எதிர் வரும் வாரங்களில் பார்க்கலாம்.

2024 ஒலிம்பிக்கில் இருந்து ரஷ்யா எப்படி தடை செய்யப்பட்டது பற்றி உலகம் அறிந்தாலும்,










ஐஓசி சமீபத்தில் ரஷ்யாவை வரவிருக்கும் ஒலிம்பிக்கில் ஒரு நாடாக பங்கேற்க தடை விதித்ததுள்ளது. ஆயினும் சில ரஷ்ய விளையாட்டு வீரர்கள் நடுநிலைக் கொடியின் கீழ் போட்டியிடலாம், அவர்கள் வெற்றி பெற்றால், பதக்க விழாவின் போது அவர்களின் தேசிய கீதம் இசைக்கப்படாது எனவும் தெரிவித்தது.

'ஐஓசி' மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை கவனிக்கத் தயாராக உள்ளது. ஆனால் விளையாட்டு வீர்ர்களுக்கு எதிரான குற்றங்களை அது கருதவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது. ஆயினும் சர்வதேச அரங்கில் ஒலிம்பிக் போட்டிகளில் தடைகளும்,பகிஷ்கரிப்பும், புறக்கணிப்பும் தொடர்ந்து வருகிறது.

1980களில் மாஸ்கோ ஒலிம்பிக் போட்டிகளை அமெரிக்கா பகிஷ்கரித்ததும், பின்னர் 1984இல் அமெரிக்காவில் நடந்த போட்டிகளை ரஷ்யா புறக்கணித்ததும் வரலாறு.

இருப்பினும், கடந்த தசாப்தத்தில் இஸ்ரேலிய இராணுவம் பாலஸ்தீனிய கால்பந்து வீரர்களைக் கொன்றபோதும், பாலஸ்தீனத்தின் கால்பந்து மைதானங்களில் குண்டுவீசித் தாக்கியபோதும் ஃபிஃபா (ய்ணுாய்பு) கவலைப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

இஸ்ரேல் மேற்குக் கரை அல்லது காசாவில் நிலத்தை



முழுவதுமாக இணைத்துக் கொள்ளத் தொடங்கினால், ரஷ்யாவைப் போலவே இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களையும் நடுநிலையாளர்களாகப் போட்டியிடச் சொல்ல ஐஓசி அழுத்தம் கொடுக்கப்படலாம் எனவும் கூறப்படுகிறது.

**பாலஸ்தீனம் மீது ஆக்கிரமிப்பு**

மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான செயலின்மைக்காக, நடுநிலை என்ற சொல்லை ஐஓசி அடிக்கடி பயன்படுத்துவதை பலரும் விமர்சித்துள்ளனர்.

ஐஓசி பாலஸ்தீனியர்களை ஒரு அந்நிய மக்களைப் போல நடத்துகிறது. ஒலிம்பிக் குடும்பத்தின் முழு உறுப்பினராக பாலஸதீனம் இல்லாவிடுனும், அவர்களுக்கு அனுதாபமும் ஆதரவும் தேவை. உக்ரைன் மற்றும் பாலஸ்தீனத்தின் மீதான ஆக்கிரமிப்பாளர்கள் விளையாட்டுப் போட்டிகளில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும்.

அயர்லாந்தின் சர்வதேச விளையாட்டு நிறுவன இன்சகா அயர்லண்ட் (Insaka‡Ireland) இன் உறுப்பினரான லுளஜ னிஉளீற்ள, கூறுகையில் அயர்லாந்தில் உள்ள சில விளையாட்டு வீரர்கள் இஸ்ரேலை ஒலிம்பிக்கில் இருந்து தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை பரிசீலித்து வருகின்றனர். ஐஓசி ரஷ்யாவிடம் அதைச் செய்தது. ஏன் அவர்களால் அதை இஸ்ரேலுக்கு செய்ய முடியாது என வினவுகின்றனர்.

**நூறு ஆண்டின் பின் பாரிஸில்**

2024 ஜூலை 26 அன்று ஒலிம்பிக்கிற்கான தொடக்க விழாவை, பாரிஸ் நகரில் உள்ள செய்ன் நதிக்கரையில் சுமார் மூன்று மணி நேரம் நடத்துவதற்காகத் திட்டமிட்டுள்ளனர். ஒலிம்பிக்ஸின் நூற்றாண்டு விழாவாக இதைக் கொண்டாடும் வகையில், தொடக்க விழாவில் நூறு படகுகள், விளையாட்டு வீரர்களை ஏற்றிக்கொண்டு பாண்ட் டி ஆஸ்டர்லிட்ஸில் தொடங்கி ஈபிள் கோபுரம் வரை அழைத்துச் செல்லவுள்ளது. இப்போட்டி 26 ஜூலை 2024அன்று தொடங்கி 11 ஆகஸ்டு 2024 வரை நடைபெறும். பாரிஸின் முக்கியச் சுற்றுலா தளங்களான வெர்செய்ல்ஸ் அரண்மனை, ஈபிள் கோபுர மைதானம் ஆகியவையும் இதில் இடம்பெற்றுள்ளன.

## அனைத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அரங்கின் ஊடாக கண்டி நகரின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. மேலும், கண்டிக்கு நவீனநூலகமொன்றைவழங்கவும் எதிர்பார்க்கிறோம். போகம்பர வேலைத்திட்டத்தின் கீழ் மூன்று அல்லது நான்கு மாடி நூலகக் கட்டிடம்ஒன்றைவழங்கஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள டி.எஸ். சேனநாயக்க நூலகம்புதியஇடத்திற்குமாற்றப்படும் போது இங்குள்ள நூலகக் கட்டிடமும் இந்த அரங்குடன் இணைக்கப்படும் என எதிர்பார்க்கிறேன்.. அப்போது இந்தஇடம்பண்டாரநாயக்கமாநாட்டு மண்டபம்போன்றவசதிகள்கொண்ட இடமாக மாறும்.

கண்டி அபிவிருத்தி வேலைத் திட்டத்தை அடுத்த வருடம் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம். மேலும், கண்டியில் பல்வகைமை போக்குவரத்து மையத்தை உருவாக்கும் பணிகள் அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படும். கோபல்லவ மாவத்தையில் இன்னும் ஒற்றை மாடி வீடுகள் தான் உள்ளன. அந்த வீடுகளை அகற்றி குறைந்தபட்சம் மூன்று மாடி வீடுகளையாவது கட்டவேண்டும். அடுத்தஐந்துஆண்டுகளுக்குள்அந்த நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். அதன்படி நவீன கண்டி நகரம் உருவாகி வருகிறது. அடுத்த மாதம் முதல் இதற்கான பணிகள் தொடங்கும். ஆனால், நாட்டில் நிலவும்பொருளாதாரநெருக்கடியால் பணிகள் தாமதமாகின. நாட்டின் வங்குரோத்து நிலையால், வளர்ச்சித் திட்டங்கள் நிறுத்தப்பட்டன.

நாடுவங்குரோத்தடைந்தபிறகு, நாங்கள் இரண்டு குழுக்களை சமாளிக்க வேண்டியிருந்தது. பல நாடுகள் எமக்கு கடன் வழங்கியுள்ளன. கடன் பெற்ற நாடுகளில் இந்தியா, சீனா, ஜப்பான் மற்றும் பெரிஸ் ஒப்பந்தத்தைச் சேர்ந்த அமைப்புகளும் அடங்கும். இந்தக் கடன் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் இந்தியாவும் ஏனைய அமைப்புகளும் பெரிஸ் கழகத்திற்கு வர சம்மதித்தாலும், சீனா அதற்கு முன்வரவில்லை. சீனாவுடன் தனித்தனியாக பேச்சு நடத்திவருகிறோம். இலங்கையைப் போன்று வங்குரோத்து நிலைக்குச் சென்ற ஏனைய நாடுகளும் இவ்வாறான இக்கட்டான சூழலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இவை அனைத்தையும் சர்வதேச நாணய நிதியத்தின் விதிமுறைகளின்படி செய்யப்பட வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் முதல் ஒப்பந்தத்தை எட்டினோம். இந்தியா, சீனா மற்றும் பெரிஸ் கழகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய கடன் மறுசீரமைப்பை எங்களால் முன்வைக்க முடிந்தது. சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பட்டவாறு முதல் கடன் தவணையைப் பெற்றோம். அமெரிக்கதிரைசேறிசெயலாளருடன் கலந்துரையாடினோம். அதன்பின், ஜப்பான் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதியமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாட வேண்டியிருந்தது. இந்திய நிதியமைச்சர் மற்றும் இந்தியப் பிரதமருடன் கலந்துரையாடப்பட்டது. சீனாசென்று ஜனாதிபதிமற்றும்நிதியமைச்சருடன் கலந்துரையாடியிருந்தோம். இவர்கள் ஒவ்வொருவருடனும் பேசி உடன்பாடு எட்டப்பட்டது.

தற்போது லண்டன் சென்று தனியார் கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுள்ளதால் மீண்டும் கடன் பெற முடியும். எனவே, விரைவில் அபிவிருத்திப்பணிகளைஆரம்பிக்க முடியும். அடுத்த ஆண்டு மேலும் பல அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படும். வங்குரோத்து நிலையில் இருந்து இப்போதுதான் வெளியே வந்தோம். சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய நாடுகளின் கடன்கள் தொடர்பான ஒப்பந்தங்கள் காரணமாக இந்த நிலையை எட்ட முடிந்தது.

நமது நாட்டின் கடனை அடைக்கக் கூடிய குறைந்தபட்ச வருமானம் இருப்பதைக் காட்ட வேண்டும். எவ்வளவு கஷ்டம் வந்தாலும் முன்னேறிச் செல்ல வேண்டும்என்று முடிவுசெய்தோம். முதலாவதாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியை 10.4ூ ஆக அதிகரிக்க வேண்டும் என்பது எங்களுக்கு கொடுக்கப்பட்ட இலக்கு. 2024இல் அந்த இலக்கை அடைய முடியாது. இந்த இலக்கை 2025, 2026 காலப்பகுதிக்குள் அடையலாம். எனவே, நாங்கள் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி 2024 இல் மொத்தத் தேசிய உற்பத்தியை 9.2ூ ஆக எட்டுவதை இலக்காகக் கொண்டு செயல்பட்டோம்.

இந்த இலக்கை 2024இற்குள் எட்டுவதற்கு எமது வருமானத்தில் 534 பில்லியன் பற்றாக்குறை உள்ளது. அதுதான் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை.

அந்த பற்றாக்குறைக்கு அஸ்வெசும திட்டமும் ஒரு காரணம். அதற்கு 61 பில்லியன் செலவிட்டுள்ளோம். ஆனால் நிவாரணத்திற்காக 207 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இது இந்த நாட்டின் ஏழை மக்களுக்கானது. மேலும், அரசு ஊழியர்களின் சம்பளமும் உயர்த்தப்பட்டது.

சம்பள அதிகரிப்பு மற்றும் ஓய்வூதியத்திற்காக மேலும் 133 பில்லியன்ரூபாஒதுக்கப்பட்டது. இந்த 534 பில்லியன் தேவையில்லை என்று சொல்வதாக இருந்தால் அஸ்வெசும மற்றும் சம்பள உயர்வு என்பவற்றை நீக்க வேண்டும். இந்த நாட்டின் பொருளாதாரம் 3 வருடங்களாகமூலதனச்செலவின்றி வீழ்ச்சியடைந்தது. எனவேஇதற்காக வரிகளை அதிகரிக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் கூறியது.

வரிகளை உயர்த்தினால், பிரபலம் குறையும். ஆனால் பொருளாதாரத்தை காப்பாற்றினால், நமது வங்குரோத்து நிலை மறைந்துவிடும். பல வரிகளை உயர்த்தியிருக்கலாம். எரிபொருள் வரியை உயர்த்தினால், அது மற்ற அனைத்துத் துறைகளையும் பாதிக்கும். எரிபொருள் வரிமின் கட்டணத்துடன் சேர்க்கப்பட்டு பெரிய தொகையாக கட்டணம் உயரும்.

15 சதவீதமாக இருந்த வற் 18 சதவீதமாக உயர்த்தப்பட்டது. மேலும், தற்போது வற் வசூலிக்கப்படாதவற்றுக்கும் இந்த வரி விதிக்கப்பட்டது. ஏனைய நாடுகளிலும்வற்வசூலிக்கப்படுகிறது. இந்தியாவில் 23 சதவீதம் வரையும் பாகிஸ்தானில், 18 சதவீதம் வரை வற் வசூலிக்கப்படுகிறது. எனவே, அமைச்சரவையில்இந்தகடினமான முடிவை எடுக்க நேரிட்டது. கடந்த தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் தான்அமைச்சரவையில்உள்ளனர். வரி உயர்வை அவர்கள் யாரும் விரும்பவில்லை. ஆனால் வேறு மாற்று வழியில்லை. 2024ஆம் ஆண்டுக்குள் இந்த நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்க அரசு உறுதி பூண்டுள்ளது. அதனால் அனைவரும் கடினமான இந்த முடிவுக்கு உடன்பட்டனர்.

சில நிபுணர்கள் மற்றும் அரசியல்வாதிகள் சர்வதேச நாணய நிதியத்துடன்மீண்டும்பேச்சுநடத்தப் போவதாக சிலர் கூறுகிஷஷறார்கள். இது முழுமையான பொய். சர்வதேச நாணய நிதியம் என்பது ஒரு நிறுவனம் அல்ல. நாம் பல நாடுகளுடம் பேசினோம். பல நாட்டு தலைவர்களைச்சந்தித்தோம். இதை மாற்றினால் நம் நாடு மீண்டும் கடனை கட்ட வேண்டி வரும் என்கிறார்கள். இதனை மாறினால் மீண்டும் வங்குரோத்து நிலைக்கு செல்வோம்.

மீண்டும் வங்குரோத்து நிலைக்கு திரும்ப வேண்டுமா? என்று கேட்க வேண்டும். இதை எதிர்ப்பவர்கள் சர்வதேச நாணய நிதியத்துடனானவேலைத்திட்டத்தை முன்னெடுக்காவிட்டால், வேறு என்ன செய்ய முடியும் என்ற மாற்று வழியைக் கூறவேண்டும். நாம் எப்படி பணம் திரட்டப் போகிறோம். எப்படிவங்குரோத்துநிலையிலிருந்து வெளியேறப் போகிறோம் என்பதை அவர்கள் அறிவிக்க வேண்டும். இதுதான் எமது அரசியலில் உள்ள மிகப்பெரிய பலவீனம். பொறுப்பேற்க யாரும் தயாராக இல்லை. கடினமான முடிவுகளை எடுக்க யாரும் தயாராக இல்லை. எனவே இதுதொடர்பில் அனைத்து அரசியல் தலைவர்களும் பொறுப்புடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்துக்கு உண்மையாக இருப்பின் உதவி தொடர்ந்து கிட்டும்

## மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் தெரிவிப்பு

நாம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச்செயற்திட்டத்துக்கு உண்மையாக இருந்தால் மாத்திரமே, எதிர்வரும் காலங்களில் எந்தவொரு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இப்போது எமக்கு சலுகை அளிக்கும் நாடுகள் தொடர்ந்து அதனை வழங்கும். மாறாக நாம் இந்தத் திட்டத்திலிருந்து விலகுவதாக இருந்தால், வருடாந்தம் 6 பில்லியன் டொலர் கடன் தொகையை மீளச்செலுத்துவதற் கான இயலுமை எமக்கு இருக்கவேண்டும். இதனைக் பொதுமக்கள் புரிந்துகொள்வதும், அதற்கேற்றவாறு செயற்படுவதும் அவசியம் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச் செயற்திட்டம் தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு -

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நான் நியமிக்கப்படுவதற்கு முன்னர், முன்னாள் ஜனாதிபதி சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைக் கோரியிருந்தார். இருப்பினும் அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. மாறாக ரூபாவின் பெறுமதி எவ்வித கட்டுப்பாடுமின்றி வீழ்ச்சியடைவதற்கு இடமளிக்கப்பட்டது.

சுமார் 6 பில்லியன் டொலர் பெறுமதியான கடன்களை மீளச்செலுத்தவேண்டியிருந்த போதிலும், அவ்வப்போதைய தேவைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய வகையில் கையிருப்பில் 25 மில்லியன் டொலர்கள் மாத்திரமே காணப்பட்டன.

குறுகிய காலத்தில் கடன்களை மீளச் செலுத்துவதற்குப் போதுமான நிதி இருக்கவில்லை. ஆகையால் கடன் மீள்செலுத்துகையைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அரசாங்கம் அறிவித்ததுடன், அப்போதைய சூழ்நிலையில் அது மிகச் சிறந்த தீர்மானமாகக் காணப்பட்டது.

இருப்பினும் அப்போது அந்த அறிவிப்பு தொடர்பில் நாடு முழுவதும் பல்வேறு விவாதங்கள் இடம்பெற்றதை நான் அவதானித்தேன்.

இருப்பினும் நாம் அப்போது கடன் மீள்செலுத்துகை இடைநிறுத்தத்தை அறிவித்தோமே தவிர, வங்குரோத்து நிலையை அறிவிக்கவில்லை. உண்மையில் பார்த்தால் இவை இரண்டும் இரு வேறு சொற்பதங்களாகும்.

வங்குரோத்து நிலை என்பது கடன்களை மீளச்செலுத்த முடியாமை மற்றும் அக்கடன் மீள்செலுத்துகைக்காக நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்கின்ற நிலையாகும்.

எனவே, அவ்வங்குரோத்து நிலையைத் தடுப்பதற்காக நாம் தற்காலிக கடன் மீள்செலுத்துகை இடைநிறுத்தத்தை அறிவித்தோம். அதாவது கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் வரை கடன் மீள்செலுத்துகையைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதாகும்.

எனது நிலைப்பாடு என்னவெனில், நாடு வங்குரோத்து நிலையை அடையவில்லை. கடன்மீள்செலுத்துகைஇடைநிறுத்தம் தொடர்பில் தொலைபேசி வாயிலாகக் கடன் வழங்குநர்களுக்கு அறிவித்திருக்கலாம் எனவும், அதனைப் பகிரங்கமாக அறிவித்திருக்கவேண்டியதில்லை எனவும் சில குழுக்களின் கலந்துரையாடல்களில் கூறப்பட்டது. ஆனால் தொலைபேசி வாயிலாக கடன் மீள்செலுத்துகை இடைநிறுத்தப்பட்ட சம்பவங்கள் வர லாற்றில் இல்லை. மாறாக அது நகைப்புக்குரியதொரு விடயமாகவே இருக்கும்.



இவ்வாறானதொரு பின்னணியில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதியுதவியைப் பெறுவதற்கு அப்பால், அதனிடமிருந்து இலங்கை தொடர்பில் உத்தரவாதத்தைப்பெறுவதேமிகமுக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டது.

அதன்படி தற்போது சர்வதேச நாணய நிதியம் வழங்கியிருக்கும் உத்தரவாதத்தின்படி, இலங்கையின் கடன் மீள்செலுத்துகை ஆற்றல் முன்னேற்றமடைந்து வருவதாகக் கூறப்பட்டிருக்கின்றது.

அதேவேளை, நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பணியாற்றுவதன் காரணமாக ஜப்பான், சீனா, இந்தியா மற்றும் பாரிஸ் கிளப் நாடுகள் என்பன இலங்கைக்குக் கடன் சலுகை வழங்குவதற்கு இணங்கியுள்ளன.

எனவே, கடன் மறுசீரமைப்பின் ஊடாக அடுத்த 10 ஆண்டுகளுக்கு 10 பில்லியன் டொலர்களுக்கும் மேற்பட்ட கடன் சலுகை (செலுத்தவேண்டிய கடன்களிலிருந்து 10 பில்லியன் டொலர்கள் கழிக்கப்படும்) எமக்குக் கிடைக்கப்பெறுமென எதிர்பார்க்கின்றோம்.

அதேவேளை நாம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச்செயற்திட்டத்துக்கு உண்மையாக இருந்தால் மாத்திரமே, எதிர்வரும் காலங்களில் எந்தவொரு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இப்போது எமக்கு சலுகை அளிக்கும் நாடுகள் தொடர்ந்து அதனை வழங்கும். மாறாக, நாம் இந்தத் திட்டத்திலிருந்து விலகுவதாக இருந்தால், வருடாந்தம் 6 பில்லியன் டொலர் கடன் தொகையை மீளச்செலுத்துவதற்கான இயலுமை எமக்கு இருக்கவேண்டும். இதனை பொதுமக்கள் புரிந்துகொள்வதும், அதற்கேற்றவாறு செயற்படுவதும் அவசிய மாகும். - என்றார். (05)

# பொது நிதி செலவினத்துக்கு பொறுப்புக்கூறாத இராணுவத்தை மனித உரிமை மீறல்களுக்கு எப்படி பொறுப்புக்கூற வைப்பது?

## அம்பிகா சற்குணநாதன் கேள்வி

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் பொது நிதிசார் செலவினங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படாத நிலையில், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அவர்களை எவ்வாறு பொறுப்புக்கூறவைக்கமுடியும்எனசித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஐக்கிய நாடுகள் நிதியத்தின் உறுப்பினர் அம்பிகா சற்குணநாதன் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.



போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னரும் கல்வி மற்றும் சுகாதாரத்துறையுடன் ஒப்பிடுகையில் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுவருவது குறித்து பல்வேறு தரப்பினராலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், 2024ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தில் பாதுகாப்புத்துறைக்கு 423 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.5 சதவீதமாகக் கணிக்கப்பட்டிருக்கும் இந்நிதி ஒதுக்கீடு தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. இவ்வாறானதொரு பின்னணியில் இவ்விடயத்தை மேற்கோள் காட்டி தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் (ருவிட்டர்) செய்திருக்கும் பதிவிலேயே அம்பிகா சற்குணநாதன் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

அப்பதிவில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு -

இலங்கை கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றின் 2022ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கை இலங்கை இராணுவத்தின் கணக்காய்வு அறிக்கையைப் போன்று நிதி முறையற்ற விதத்தில் முகாமை செய்யப்பட்டிருப்பதைக் காண்பிக்கின்றது.

இருப்பினும் நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் சூழ்நிலையில் படையினரால் பொதுநிதி முறையற்ற விதத்தில் கையாளப்படுவது தொடர்பாகத் தெற்கில் இயங்கிவரும் எந்தவொரு அரசியல் கட்சியும் பேசவில்லை.

நிதியியல்சார் பொறுப்புடைமை குறித்துப் பேசுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ டி சில்வா, எரான் விக்ரமரத்ன போன்றோர் இவ்விடயம் தொடர்பிலும் குரலெழுப்ப வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

தற்போது இராணுவம் சட்டத்துக்கு அமைவாக செயற்படாமல், பொது நிதியை தமது விருப்பத்துக்கு ஏற்ப செலவிடும் கட்டமைப்பாக எழுச்சியடைந்துள்ளது.

இருப்பினும் அது உரியவாறு கண்காணிப்புக்கு உட்படுத்தப்படவில்லை. அதேபோன்று தமது வாக்கு வங்கிக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் என்பதால் தெற்கில் இயங்கிவரும் அரசியல்வாதிகளும் அது தொடர்பில் பேச முற்படவில்லை.

குறைந்தபட்சம் பொதுநிதியில் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் தொடர்பில் கூட இராணுவத்தை பொறுப்புக்கூறச் செய்ய முடியவில்லை என்றால், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அவர்களைப் பொறுப்புக்கூறவைக்க முடியும் என்பதற்கான சாத்தியப்பாடு எங்கே இருக்கின்றது?

சட்டங்களுக்கு அமைவாக செயற்படுகின்ற சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமெனில், இராணுவத்தினரைப் பொறுப்புக்கூறச் செய்வதைத் தவிர்க்கமுடியாது எனத் தெரிவித்திருந்தார். (05)



# உலக வங்கியின் 5 வருட திட்டத்தை சிறப்புற முன்னெடுத்த சுகாதாரதுறையினர் கௌரவிப்பு

உலக வங்கியின் அனுசரணையில் ஆரம்ப சுகாதார அமைப்பை வலுப்படுத்தும் திட்டத்தின் நிறைவை முன்னிட்டு இந்தச் செயற்திட்டத்தில் பங்குகொண்டவர்களையும் ஒத்துழைப்பு வழங்கியவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வொன்று மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வு கிழக்கு மாகாண சுகாதார பயிற்சி நிலையத்தில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் சுகாதார துறையினர் கௌரவிக்கப்பட்டதுடன் அதிதிகளுக்கு நினைவு சின்னங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண சுகாதார பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் அ.லதாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜெ.முரளிதரன் மற்றும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.ஜி.எம்.கொஸ்தா, பிராந்திய சுகாதார பணிப்பாளர்கள், மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்ட சுகாதாரத்துறை அதிகாரிகள் மற்றும் வைத்தியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர். (05)

# பொலிஸாருக்கு போதை வியாபாரிகள் தொடர்பாக தகவல் வழங்க மட்டக்களப்பில் தொலைபேசி இலக்கம் அறிமுகம்

மட்டக்களப்பில் போதைப்பொருள் வியாபாரிகள் தொடர்பாக தகவல் வழங்குபவரின் தொலைபேசி இலக்கம் பொலிஸாரின் தொலைபேசிக்கு காட்டாத 0718598840 என்ற புதிய தொலைபேசி இலக்கத்தின் ஊடாக போதை வியாபாரிகளது தகவலை வழங்குமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ.எதிரிமான பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்து வைத்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

பதில் பொலிஸ் மா அதிபரின் விசேட போதைப்பொருள் ஒழிப்பு திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து போதைப்பொருள் வியாபாரிகளது தகவலைப்; பெறுவதற்கான புதிய பொறிமுறையாக இந்தத் தகவல் வழங்குபவரின் தொலைபேசி இலக்கம் பொலிஸாருக்குக் காட்டாத புதிய முறையை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இந்த புதிய பொறிமுறைக்கமைய மாவட்டத்தில் போதைப்பொருளை ஒழிப்பது தொடர்பாக மாவட்டதிலுள்ள 14 பொலிஸ் நிலைய பிரதேசங்களில் இந்த புதிய தொலைபேசி இலக்கத்தை பொதுமக்கள் பார்வைக்குக் காட்சிபடுத்தப்படும்.

எனவே பொதுமக்கள் பயமின்றி போதைப்பொருள் வியாபாரிகள் தொடர்பான தகவல்களை அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 0718598840 என்ற இலக்கத்தின் ஊடாக அறியப்படுத்தி இந்த மாவட்டத்தில் மட்டுமல்ல இந்த நாட்டிலுள்ள எதிர்கால சந்ததிகளை இந்த போதைப்பொருள் பாவனையில் இருந்து மீட்பதற்காக போதைப்பொருள் வியாபாரிகள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (05)



# அனுமதியற்ற நடைபாதை வியாபாரத்தை யாழ்ப்பாணத்தில் உடன் அகற்றப் பணிப்பு

## வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பணிப்பு

யாழில் காணப்படும் அனுமதியற்ற நடைபாதை வியாபார நிலையங்களை உடனடியாக அப்புறப்படுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதால் டெங்கு நுளம்பு பரவுவதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

டெங்கு நுளம்பு அதிகம் பரவும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் குறிப்பாக வடிகான்களில் நீர் தேங்கி நிற்பதால் நுளம்பு பெருக்கம் அதி கரிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதனைக் கருத்தில் கொண்டு குறித்த வடிகான்களை சுத்தப்படுத்துவதோடு, வீதி ஓரங்களில் போடப்பட்டிருக்கக்கூடிய நடைபாதை வியாபார நிலையங்களை உடனடியாக அப்புறப்படுத்துமாறும் பொலிஸாருக்கு ஆளுநர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் உடன் அமுலாகும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன் ஊடாக வடக்கு ம ாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதி பருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு சுகா தாரத்தரப்பினர், உள்ளூராட்சி ஆணைய-ாளர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் ஆளுநர் ஆலோசனை வழங்கி உள்ளார்.

மறு அறிவித்தல் வழங்கப்படும் வரை யாழ்.மாவட்டத்தில் காணப்படும் அனுமதி அற்ற நடைபாதை வியாபார நிலையங் களை அகற்றுமாறும் ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# சிறந்த பேச்சாளரான தரம் 3 மாணவன்

2023 சிறுவர் தினத்தை முன்னிட்டு ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தூதுக்குழு அலுவலகத்தால் நடாத்தப்பட்ட போட்டியில் பங்குபற்றி, நாடளாவிய ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த பேச்சுகளில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டமைக்கான சான்றிதழ் எஸ்.எம். திஹ்யா என்ற சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தி யாலய தரம் 3 மாணவனுக்கு வழங்கப்பட்டது.

சக்தியைப்பாதுகாக்க, கழிவுகளைக்குறைக்க மற் றும்சூழலுக்குஇசைவானஇல்லச்செயற்பாடுகளுக்கு பிள்ளைகளின்பங்களிப்புஎனும்தொனிப்பொருளை மையமாக வைத்து நடாத்தப்பட்ட 10 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான பசுமை நிகழ்நிலை (மெ ாபைல்) போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு டிசெம்பர் 16 கொழும்பில் உள்ள ஹட்ச் ஓர்க்ஸ் நிலையத்தில் நடைபெற்றபோது யூரோப்பியன் யூனியன் டெலீகன் டு சிறீ லங்கா அண்ட் மொலட்டிவ்ஸ் ஹெட் ஒப் கோபரேன் கலாநிதி ஜான் எச் ஹேசெ அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

'ஒவ்வொரு செயலும் ஆரோக்கியமான, மகிழ்ச்சியான பூமியை நோக்கி எனும் உலகத்தை தொடர்ந்து வளர்ப்போம்' என்பதன் ஊடாக உலகை பசுமையானஇடமாகமாற்றுவதற்கானபிள்ளைகளின் அர்ப்பணிப்பைப் பாராட்டும் பொருட்டு பரிசளிப்பு மற்றும் பசுமைசார் செயற்பாடுகள் இதன்போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இவர் சாய்ந்தமருது இயற்கையை நேசிக்கும் மன்றத்தின் இளம் செயற்பாட்டாளர் என்பதும் குறிப் பிடத்தக்கது. (05)

# களனிப் பல்கலைக் கழகத்தில் மூடப்பட்ட கற்கைகள் ஆரம்பம்

களனிப் பல்கலைக்கழகத்தில் மூடப் பட்டுள்ள ஏனைய பீடங்களின் கற்கை நடவடிக்கைகள் இன்று முதல் மீள ஆரம் பிக்கப்படும் என பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் நிலந்தி டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடங்களின் கற்கைகள் இவ்வாறு ஆரம்பிக்கப்படவுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களுக்கும் கல்விசாரா ஊழியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக, பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்;ட சம்பவத்தை அடுத்து மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய அனைத்து பீடங்களையும் தற்காலிகமாக மூடுவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானித்தது.

அத்துடன், குறித்த தாக்குதல் சம்பவத் துடன் தொடர்புடைய 4 மாணவர்களுக்கு வகுப்புத் தடையும் விதிக்கப்பட்டது.

பின்னர், கடந்த 11 ஆம் திகதி களனிப் பல் கலைக்கழகத்தின், விஞ்ஞானம், கணனித் தொழினுட்பம், வர்த்தகம் மற்றும் முகாமை த்துவம் ஆகிய 3 பீடங்களும் திறக்கப்பட்டன. ஏனைய 2 பீடங்களும் எதிர்வரும் 18 ஆம் திறக்கப்படும் என பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் தெரிவித்திருந்த நிலையில், இன்று முதல் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடங்கள் திறக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# இளநீர் ஏற்றுமதி அதிகரிப்பு

நாட்டிலிருந்து ஒவ்வொரு வாரமும் சுமார் 2 லட்சத்து 52 ஆயிரத்து இளநீர் ஏற்றுமதி செய்-யப்படுகின்றன என பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இளநீர்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் 2022 இல் இரண்டு பில்லியன் ரூபா வருமா னம் ஈட்டப்பட்டுள்ளதுடன், இந்த ஆண்டு ஆறு பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்ட எதிர்பார்த்துள்ளதாகவும் கூறியுள்ளது.

இந்நிலையில் இளநீர் தோட்டங்களை ஒரு பயிராக பயிரிடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும், உலகில் பல நாடுகள் இளநீர் பயிரிட முயற்சித்தாலும் உலகில் மிகவும் சுவையான இளநீர் இலங்கை இளநீர் என்றும், எனவே இலங்கையில் இளநீரை பிரபலமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார். (05)

# உற்பத்தித்துறை வீழ்ச்சிக்கு வரிகள் விதிப்பே காரணமாம்

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

நாடு உற்பத்தித்துறையில் தன் னிறைவு அடையாமைக்கு மூலப் பொருள்களுக்கு அதிக வரி விதிக்கப்படுவதே காரணம் என

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

பிங்கிரிய தொகுதி ஐக்கிய இளைஞர் சக்தியின் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

'எமது நாடு முட்டையில் தன்னி றைவு அடையவில்லை இதற்குத் தேவையான மூலப் பொருள்களுக்கு அதிக வரி விதிக்கப்படுவதே இதற்குக் காரணம்.

இதனால் முட்டையைக் கூட வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது.

இதன் காரணமாக மட்டுப்படுத் தப்பட்ட அந்நியச் செலாவணியைக் கூட இழக்க நேரிட்டுள்ளது.

நாட்டில் உற்பத்தித்துறையில் ஆக்கபூர்வமான வேலைத்திட்டம் இல்லாததும், தேவையான வசதி களுடன் தேசிய உற்;பத்திக்கு முன்னுரிமை வழங்கப்படாமையே இதற்குக் காரணம்.

நாட்டில் நிதி இல்லையென்றால், கடல்சார் பொருளாதார முயற்சிய-ாண்மைகளுக்கு கூட்டுத் திட்டங்கள் மூலம் நிலையான அபிவிருத்தி இலக்குகளை எம்மால் அடையலாம்.

இவ்வாறான புதிய ஆக்கபூர்வம ான தீர்வுகளே நாட்டுக்குத் தேவை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார். (05)



# ஜனாதிபதியின் எடுபிடிகள் மீள எழுச்சிபெற முயற்சி

## சஜித் சாட்டை

15 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக ஏயுவு வரியை அதிகரித்து நாட்டையே வங்குரோத்து நிலமைக்கு கொண்டு சென்ற ஜனாதிபதியின் எடுபிடிகள், மீண்டும் எழுச்சி பெற முயல்கின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பியகம பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வங்குரோத்து நிலையால் வறுமை 30 லட்சத்திலிருந்து 70 லட்சமாக அதிகரித்தி ருக்கும் நேரத்தில், வறிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான முறையான வேலைத்திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தலின் போது மக்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதாகக் கூறப்பட்டாலும், ஆட்சிக்கு வந்த பின் அரசியல்வாதிகளே தீர்மானங்களை எடுக்கின்றனர்.

எனவே, அதனை மாற்ற வேண்டிய தருணம் தற்போது வந்துள்ளதாகவும், கிராமத்திலும் நகரத்தி லும் தீர்மானிக்கும் அதிகாரத்தை இளைஞர்களுக்கு வழங்குவதே ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத் தின் இலக்காகும் எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித் துள் ளார். (05)

# நியாயமற்ற விலைகளினன் அதிகரிப்பு நுகர்வோர் அதிகாரச் சபை எச்சரிக்கை

வற் வரி என்ற போர்வையில் பொருள்களின் விலையை நியாயமற்ற வகையில் அதி கரிக்கும் வர்த்தகர்களுக்கு எதிரான முறைப்பாடுகளை 1977 என்ற துரித இலக்க திற்கு அழைத்து அறிவிக்க முடியும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித் துள்ளது.

மேலும் இந்த விடயம் தொடர்பாக வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் வற் வரியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், அது தொடர்பான திருத்தச் சட்ட-மூலம் அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதன்படி, ஏற்கனவே 15 சதவீதமாக இருந்த வற் வரி, 18 சதவீதமாக அதி கரிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த வரி அமுலாவதற்கு முன்னதாகவே நியாயமற்ற வகையில் பொருள்களின் விலையை அதிகரித்துள்ள வர்த்தகர்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

எனவே, இதனைத் தடுக்கும் வகையில், இது தொடர்பான முறைப்பாடுகளை 1977 என்ற துரித இலக்கதிற்கு அழைத்து அறிவிக்க முடியும் என அதி காரசபை குறிப்பிட்டுள்ளது. (05)

# தாயைத் தேடி ஓடிச் சென்ற சிறுவன் விபத்தில் இறப்பு

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவு ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரதான வீதி யில் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் ஏறாவூர், தாமரைக்கேணியை சேர்ந்த விசேட தேவையுடைய அமீர்தீன் யாசிர் அறபாத் (வயது 16) என்ற சிறுவனே உயிரி ழந்துள்ளார்.

தாயை எதிர்பார்த்து பஸ் தரிப்பிடத்தில் இருந்த இச்சிறுவன், தாயை கண்டதும் வீதி யை கடந்து தாயிடம் ஓடிச் செல்லும் போது பிரதான வீதியால் பயணித்த தனியார் ஆடைத் தொழிற்சாலைக்கு சொந்தமான பஸ் ஒன்றுடன் மோதுண்டதால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தள்ளார்.

பஸ்ஸின் சாரதி ஏறாவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, சிறுவனின் சடலம் 1990 விசேட அம்புலன்ஸ் மூலம் ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதி காரியின் வேண்டுகோளின் பேரில், சம்பவ இடத்துக்கு சென்ற மரண விசாரணை அதி காரி எம்.எஸ். எம்.. நஸீர் ,விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்காக பிரேதத்தை மட்டக்களப்பு போதனா வைத்தி யசாலைக்கு அனுப்பிவைத்தார்

குறித்த விபத்துத் தொடர்பான மேலதி க விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.12.2023இல் வெளியிடப்பெற்றது.